20th July 1962]

கல்லூரிக்குச் சொல்லாமல் பட்டப் படிப்பு பெறுதல்

* 447 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார் கொண்டுவர உத்தேசித்திருக்கும் கல்லூரிக்குச் செல்லாமலே பட்டப் படிப்பு பெறும் திட்டத்தை நமது மாநிலத்திலும் அமுலுக்கு கொண்டுவர உத்தேசமுண்டா?

(இ) இல்லையானல், அதற்கான காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) This is a matter for the University to consider.

டிராபிக் போலிஸார் (விசேஷ அலவன்சு)

* 488 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (திரு. ஆ. தங்கவேலு—சார்பாக): கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டிராபிக் போலீசார் (Traffic Police) கடும் வெயிலில் பணியாற்றுகிறார்களே, அதற்கு ஏதாவது தனி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லையென்றால், அப்படிக் கொடுப்பதற்கு திட்டம் ஏதாவது உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) Does not arise.

மதிய உணவுத் திட்டம்

* 449 கேள்வி.—திரு. ராம. அரங்கண்ணல் (திரு. மு. பொ. வடிவேல் சார்பாக): கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் செயல்படுவதைப்பற்றி அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட மதிய உணவுத் திட்ட மதிப்பீடு கமிட்டியின் அறிக்கையை அங்கத்தினர்களின் தகவலுக்காக சபையில் வைக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir, as soon as the examination of the report is completed.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இந்த மதிய உணவுத் திட்டத்தை ஆராய்ச்சி செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் முடிவில் முக்கியமாகக் காணப்படும் சிபார்சுகள் என்ன? அவற்றின்மேல் அரசாங்கம் எடுத்துள்ள முடிவுகள் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றித்தான் என் விடையில் குறிப்பிட்டிருக்கிறேன். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அது முடிந்தவுடன் அந்த ரிப்போர்ட்டில்